22nd January 1965]

THE HON. SRI V. RAMAIAH : (a) The rules for the levy of charge for second crop on single crop wet lands are—

(i) when a wet crop is raised as a second crop, half the wet assessment is charged; and

(ii) when a dry crop is raised as a second crop, the appropriate water charge for dry crop, i.e., wet-dry/3 is charged.

(b) & (c) Yes. The District Revenue Officer, Chingleput, has been requested to take immediate action to revise the accounts of all the villages of Penalurpet sub-taluk for fasli 1373 adopting the correct charges leviable.

பால் உற்பத்தி

*73 கேள்வி—திரு. மு. கருணாநிதி: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான திட்டம் ஏதேனும் மத்திய அரசு, இந்த மாநில அரசாங்கத்திற்கு அனுப்பி யுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

*74 கேள்வி—புலவர் கா. கோவிந்தன்: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாதவரம் பால் பண்ணையில் பசுக்கள் தரும் பால் அளவை அதாவது பசுக்களின் பால் தரு ஆற்றலை உயர்த்த எடுத்துக் கொண்டு இருக்கும் நடவடிக்கைகள் யாவை?

THE HON. SRI V. RAMAIAH : A paper [a] is placed on the Table of the House.

திரு. கே. ஏ. மதியழகன்: மாதவரம் பால் பண்ணையில் சமீபத்தில் பல பசுக்கள் இறந்து விட்டன என்பது உண்மையா? அதனால் பால் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா: ரின்டர்பெஸ்ட் டிஸீஸினால் பல பசுக்கள் மரணம் அடைந்திருக்கின்றன. பால் உற்பத்தி ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மற்ற முயற்சிகளை எல்லாம் அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் எடுத்து அதிகமாக பால் வேறு இடங்களில் இருந்து கொண்டு வர என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: பால் பற்றாக்குறையினால் சென்னை நகர மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு விரிவாக என்ன நடவடிக்கைகள் அரசாங்கம் எடுக்கப் போகிறது என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

[a] Printed as Appendix on pages 469–470.

[22nd January 1965

கனம் திரு. வெ. ராமையா: அதனால் மிகவும் அதிகமாக பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை இல்லை. சில பசுக்கள் செத்து விட்டன. அதற்காக தேவையான அளவில் மற்ற இடங்களில் இருந்து பால் கொண்டு வர முயற்சி எடுக்கப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல்: பால் பண்ணையில் இருக்கிற லைசென்ஸ்தாரர்கள் போதிய லாபம் கிடைக்கவில்லை என்று அரசாங்கத்திற்கு ஏதாவது மகஜர் அனுப்பினார்களா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. வெ. ராமையா: அந்த விவரம் என்னிடம் இப்போது இல்லை.

திரு. கரு. சிமைச்சாமி: பண்ணையில் பசுக்கள் தரும் பால் அளவை உயர்த்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்ற கேள்விக்கு உயர்ந்த ஜாதி மாடுகளா என்று உறுதிப்படுத்தி பரிசீலனை செய்த பிறகுதான் சேர்த்துக் கொள்ளப்படும் என்று பதிலில் இருக்கிறது. நாட்டுப் பசுக்கள் அதிகமாக பால் கறக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா: இந்த ஆராய்ச்சி எல்லாம் வேறு இடத்தில் நடக்கும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: மாதவரம் பால் பண்ணையில் உள்ள பசுக்களில் எந்த ஜாதிப் பசுக்கள் அதிகமாக இருக்கின்றன?

கனம் திரு. வெ. ராமையா: அந்த விவரம் என்னிடம் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

ஊத்தங்கரை உப தாலூகா

* 75 **கேள்வி—திரு. ம. கமலநாதன்:** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:

ஊத்தங்கரை சப் தாலூகாவை தாலூகாவாக மாற்றும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI V. RAMAIAH: Yes. Sir. A proposal is under the consideration of the Collector of Salem to upgrade Uthangarai sub-taluk as a taluk.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஊத்தங்கரை சப்-தாலூகாவை தாலூகாவாக உயர்த்தும் யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொன்னார்கள். இந்த ராஜ்யத்தில் வேறு எந்தெந்தத் துணைத் தாலூகாக்களை தாலூகாக்களாக உயர்த்தும் உத்தேசம் இருக்கிறது? அப்படி உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமையா: இந்தக் கேள்வி ஊத்தங்கரையைப் பற்றியது. அதற்கு வேண்டிய விவரத்தைக் கொடுத்திருக்கிறேன். பொது விவரம் வேண்டுமென்றால் பொதுக் கேள்வி போட வேண்டும்.